# யாழ்ப்பாணம் தமிழுக்கு தலைநகரம் இதனை நாங்கள் உணர்கின்றோம்

## இந்தியத் துணைத் தூதுவர்

(எம்.நியூட்டன்)

யாழ்ப்பாணம் என்பது வெறும் பட்டணமோ நகரமோ அல்ல; அது தமிழுக்குத் தலைநகரம் என்றால் மிகையாகாது அவ்வாறுதான் நாங்கள் உணருகின்றோம் என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆர். நடராஜன் தெரிவித்தார்.

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 13ஆவது சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்

உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் பல நாடுகளில் இருக்கின்றது என்பதை நாம் அறிவோம். உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் வடமாகாணத்தில் இந்த நிகழ்வை நடத்துவது சிறப்பாகும். யாழ்ப்பாணம் என்பது வெறும் பட்டணமோ நகரமோ அல்ல அது தமிழுக்குத் தலைநகரம் என்றால் அது மிகையாகாது அவ்வாறுதான் நாங்கள் உணருகின்றோம்.



பல நாடுகளில் எமது உறவுகள் வாழ்கின்றனர். கிட்டத்தட்ட 150 மில்லியன் தமிழர்கள் உலகத்தின் பல நாடுகளில் வாழ்வது எமக்கு பெருமையைத் தருகின்றது. இலங்கையில் வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால் எமது உறவுகள் அயல் நாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். இவ்வாறு சென்றவர்கள் தமது வாழ்வை மட்டும் நினைக்காது எமது தாய்மொழி தமிழையும் கலை கலாசாரங்களையும் பண்பாடுகளையும் வளர்த்து வருகின்றார்கள். இது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

நான் வெளிநாடுகளுக்குச் சென்றபோதெல்லாம் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்ற இம் மக்கள் தமிழர்களாக மட்டும் இருக்காது கலை கலாசாரம் பண்பாடுகளை வளர்த்து வருவதுடன் தமது மொழியை பெருமைப்படுத்துகின்ற விடயங்களை செய்து வருகின்றார்கள்.

நாம் எல்லோரும் மற்றவர்களுடன் அன்பாக இருப்போம்; அன்புக்கு நிகர் எதுவுமே கிடையாது. அன்புக்கு கதவு கிடையாது பூட்டு கிடையாது. அன்பு எளிமையானது; இன்றியமையாதது. இதனை மற்றவர்களிடம் காட்டும் போது உலகமே பண்பாக இருக்கும். அன்பாக இருக்கும். ஆனந்தமாக இருக்கும்.

நாம் மற்றவர்களிடம் அன்பாக இருக்க வேண்டும் என்றால் முதலில் எமக்குப் பண்பு, பணிவு, அடக்கம் அமைதி வேண்டும். நாம் எல்லோரிடமும் அன்பாக இருப்போம். பண்பாட்டில் தமிழ்ப் பண்பாடே பெரிதும் அழகு என்றார்.

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் ஆபத்தான வெடிபொருட்கள்



குறித்த பிரதேசத்திற்குட்பட்ட தங்களது